மாண்புமிகு திரு. எஸ். ஜே.. சாதிக் பாஷா : (அ) and (இ) மதுரை மருத்துவக் கல்லூரியில் குடிதண்ணீர் வசதிக்காக ஒரு ஆழமான துளைக் கிணறுகட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அது சம்பந்தமான வேலைகள் முடிவடைந்து அக்கல்லூரி விடுதிகளுக்கு 1967-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

### *Fishery Rentals*

***130 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the number of Panchayats which are at present given fishery rentals ?**

### குளமகசூல்

**திரு: என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

தற்போது எத்தனை பஞ்சாயத்துக்களுக்குக் குளமகசூல் கொடுக்கப் பட்டது ?

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :** தகவல்கள் சேர்க்கப்படுகின்றன.

**MR. CHAIRMAN** : Questions are over.

## II.—ANNOUNCEMENTS

### (1) MESSAGE FROM THE GOVERNOR

**MR. CHAIRMAN** : I have received the following message, dated the 21st February 1968 from the Governor of Madras:—

'I have received with great satisfaction your resoultion of thanks for the Address with which I opened the present session of the Legislature'.

### (2) NOMINATION OF A MEMBER TO BUSINESS ADVISORY COMMITTEE

**MR. CHAIRMAN** : I have to announce to the House that under rule 166 (4) of the Madras Legislative Council Rules, I have nominated Thiru K. Ramadass, M.L.C., as a Member of the Business Advisory Committee for the year 1967–68 in the vacancy casued by the resignation of the membership of Thiru R. Venkataraman.

## III.—PRESENTATION OF THE BUDGET FOR 1968–69

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1968–69-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை, முறைப்படி, இம் மன்றத்தின் முன் வைக்கவேண்டி உங்கள் முன் வந்துள்ளேன். இவ் வரவு-செலவுத் திட்டத்தின்கண் இடம் பெற்றுள்ள வேலைத் திட்டங்களையும், அவற்றிற்கான நிதி ஒதுக்கங்களையும் குறித்து ஓரளவு விரிவாக விளக்கும் வகையில், இன்று காலை சட்டப் பேரவையில் நான் ஆற்றிய உரையின் படிகள்* மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, கூறியது கூறாமல், எனது இவ்வுரை யில் நமது மாநில நிதி நிலையின் பொதுவான சில போக்குகளையும், இவ் வரவு-செலவுத் திட்டத்தின் உட்கிடக்கையாகவுள்ள சில கோட்பாடு களையும் குறித்து, இம் மன்றத்தின் நாட்டத்தை ஈர்ப்பதே சாலும் என்று நினைக்கின்றேன்.

---

*Printed as Appendix II on pages 30–153